2003 ஏப்ரல் 25]

328—

பள்ளி தரம் உயர்த்துதல்

***19105—திரு. ஜி. கோதண்டராமன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, ஒதியத்தூர் ஆரம்பப் பாடசாலையினை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வி என்ற மைய மாநில அரசின் திட்டத்தின்கீழ், 2002-2003 ஆம் ஆண்டில், 479 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வாணையின்படி, முகையூர் தொகுதி, ஒதியத்தூர் ஆரம்பப் பள்ளியும் நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுவிட்டது. மேலும் இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 304 தொடக்கப் பள்ளிகள் 29 மாவட்டங்களிலும் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

திரு. ஜி. கோதண்டராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒதியத்தூர் கிராம பொது மக்களின் கோரிக்கையை ஏற்று, ஆரம்பப் பாடசாலையை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுத்த தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் ஒதியத்தூர் கிராம மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 329, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS